**யடவத்த பிரதேச சபை**
**மாதளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 21 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யடவத்த பிரதேச சபையின்2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிப்புகள.

(அ) 2016 ஆண்டின் ரூபா 700,000 செலவிடப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த டன்கன் இயற்கை பசளை கொட்டிலின் பெறுமதி கணகிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி துண்டாக்களில் சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருந்த ரூபா 132,500 பெறுமதியான காணி இரண்டு துண்டுகள் இரண்டு முறை மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் சபைக்கு சொந்தமான இன்னும் இரண்டு காணிகளின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆண்டின் பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கெள்வனவு செய்யப்பட்டுடிருந்த ரூபா 387,731 பெறுமதியான பொருட்கள் பொது களஞ்சிய மீதியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) க்ரீன் பாரக் நீர் உத்தேசத் திட்டத்தின் நீர் மூலத்தை தயாரிக்கும் கருத்திட்டம் அரைவாசி நிர்மான்க்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டதன் காரணமாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்திருந்த முற்பணத்தில் மேலும் அறவிட வேண்டிய ரூபா 234,929 ஆன முற்பணம் கடன் பட்டோரின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லாததுடன்,குறித்த ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டியில்லாத பொருப்பான ரூபா 112,071 தொகை கடன் கொடத்தோரின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) ரூபா 1,250,000 ஆன பொது நிதிய 4 கருத்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட அல்லது உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லாததனால் கடன் கொடுத்தோராக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வல்பொல இடுகாட்டின் மதில் நிர்மானத்தின் பெறுமதி ரூபா 107,115 மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 159,489 ஆன 2 கணக்கு விடயங்களுக்காக மீதிகள் மற்றும் அவற்றிற்கான துணை பதிவேடு மற்றும் அறிக்கைகளின் குறிப்பிட்ட மீதிகள் இடையில் ரூபா 20,420 ஆன வித்தியாசம் நிலவியது.

**1.3.3 பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதி திகதியில் பெற வேண்டிய 7 கணக்கு மீதிகளின் பெறுமதிரூபா 17,708,333 ஆனதுடன்,அதில் 3 வருட காலத்திக்குமேற்பட்டதீர்க்கப்படாத ரூபா 54,250 ஆன மீதி உள்ளடங்கப்பட்டிருந்தது.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 8 கணக்கு மீதிகளின் பெறுமதிரூபா 12,045,532 ஆனதுடன்,3 வருட காலத்திக்குமேற்பட்டதீர்க்கப்படாத கூட்டுத்தொகை ரூபா 880,099 ஆன மீதி அதில் உள்ளடங்கப்பட்டிருந்தது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

11 கணக்கு விடயங்களுக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 159,198,433 ஆன மீதிகள் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| | (i) விதி 69 | காணி விற்பனை மீதான வரி தொடர்பான பதிவேடொன்று பீ.எஸ்.26 சீ படிவம் பிரகாரம் நடாத்திச்செல்லப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) விதி 218 | 1987 ஆம் ஆண்டின் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | (i) நி.பி.571 மற்றும் 572 | ரூபா 236,001 பெறுமதியான 17 வேலைகளுக்கான காலாவதியான நிறுத்தப்பட்ட பணம் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி.762 | 2008-2013 வரையான காலப்பகுதியினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 142,708 ஆன பொருள்/பண்டம் பயன்படுத்தாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) | சுற்றறிக்கை மற்றும் ஏனைய கடிதங்கள் | |
| | (i) 2015 ஜுலை 14 ஆம் திகதி இலக்கம் 04/2015 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை | சபையின் 18 வண்டிகளுக்காக விலை மனு கோரல் இன்றி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் காப்புறுதி பெற்றுக்கொண்டு அதற்காக ரூபா 498,905 செலுததப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) 2015 மார்ச் 10 ஆம் திகதிய இலக்கம் 03/2014(i) கொண்ட திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் vi காண்டம் மற்றும் மத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் இலக்கம் 3/2/1/23 மற்றும் 2015 ஆகஸ்ட் 26 திகதிய கடிதம். | தனியார் தொலைப்பேசி பட்டியல் மீள் நிரப்பாமை ரூபா 2,000 ஆன தொலைப்பேசி கொடுப்பனவுக்கு பதிலாக சபை செயலாளரின் சம்பளத்திற்கு ரூபா 4,000 ஆன தொகை கூட்டி செலுத்தப்படடிருந்ததனால் ஆண்டினுள் ரூபா 20,000 ஆன தொலைபேசி கொடுப்பனவு கூடுதலாக செலுததப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானமீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,310,121 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,279,479 ஆனது. முன்னைய ஆண்டுடன்ஒப்பிடுகையில்மீளாய்வாண்டு நிதி விளைவுகளில் ரூபா 5,030,642 ஆன வளர்ச்சியொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 5,030,642வளர்ச்சிக்கு 4 வருமான விடயங்களில் ரூபா 10,569,265 ஆன வருமான அதிகரித்தல் விஷேடமாக தாக்கம் விளைவித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 ஏனைய வருமானம்

(அ) ஏக்கர் வரி

மீளாய்வாண்டு இறுதி திகதியில் ரூபா 36,716 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதி நிலவியது.

(ஆ) நீர்க் கட்டணம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை நீர்க் கட்டணம் மீதி ரூபா 92,856 ஆன தொகை நிலவியது.

(இ) குப்பை கட்டணம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை குப்பை கட்டணம் மீதி ரூபா 14,850 ஆன தொகை நிலவியது.

(உ) விளம்பர அறிவித்தல் பலகைக் கட்டணம்

விளம்பரப் பலகைக் கட்டணம் அறவிடல் தொடர்பாக உப யாப்பு தயார்செய்து அனுமதித்துக்கொண்டிருக்காததுடன், சபை பிரதேசத்தின் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்படுவது மற்றும் விளம்பர அறிவித்தல் கட்டண பதிவேடொன்று நடாத்திச்செல்லப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 273,500மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 5,628,750 ஆன தொகை அறவிட வேண்டியதாக இருந்தது.

### 2.4 மிகை அறவிடல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடு பிரகாரம் முன்னைய ஆண்டினுள் விதிக்கப்பட்ட மிகைகள் தொடர்பாக ரூபா 32,259 ஆன தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் பொது உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன்மூலம் முன்னேற்றமடைந்த பிரதேசமாக வெளியிடப்பட்டு வீதவரி அறவிடல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு பாதீடு பிரகாரம், வல்பொல இடுகாட்டிள் நிர்மானிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட சுடலை இரண்டு கட்டங்களினால் முடிவுசெய்ய பிரதான நோக்கமாக இருந்ததுடன், அவ் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** பிரதேச சபையினால் நிர்வாகம் செய்யப்படும் 20 சனசமூகமண்டபம்காணி தொடர்பான உரித்துரிமை மற்றும் நில அளவையாளரின் திட்டங்கள் இல்லாததுடன், 26 இடுகாடுகளின் உரித்துரிமைகள் மற்றும் 16 இடுகாடுகளின் நில அளவையாளரின் திட்டங்களும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** கலகம மெகொடவத்த எனும் காணியின் 1 ஏக்கர் 01 ரூட் 7 பர்சஸ் ஆன அளவின் பிரிக்கப்படாத மூன்றில் ஒன்றான பங்கு (பர்சஸ் 69) சபைக்கு கிடைத்திருந்த போதிலும், காணியின் உறுதி சபையில் இல்லாததுடன், காணியை சபைக்கு ஒப்படைக்கப்பட்டு 23 ஆண்டுகள் கழிந்திருந்தும், சபைக்கு சொந்தமான காணியின் எல்லைகள் உறுதிப்படித்திக்கொண்டு பொருத்தமான பொது செயற்பாட்டுக்கு ஈடுபடுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர எழுச்சி கருத்திட்டத்தின் கீழ் ரூபா 35,467,842 செலவில் நிர்மானிக்கப்பட்ட சபை அலுவலக கட்டித்தை நிர்மானிப்பதற்காக தேவையான நீரை பிரதேச சபை நீர் விநியோகத்தின் மூலம் நேரடியாக பெறப்பட்ட போதும், இன் நிர்மானத்திற்காக பாவிக்கப்பட்ட நீரின் அளவை அறிந்து ஒப்பநதக்காரரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கிடைத்திருந்த 110 கட்டிட விண்ணப்பங்களில் 43 இற்காக அனுமதி வழங்கப்பட்ட போதும், 19 விண்ணப்பங்களிற்கு மாத்தரமே இனக்கச்சான்றிதல் வழங்கப்பட்டிருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள

4 வேலைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 170,050 பெறுமதியான 190 சீமேந்து பைகள் 2017 பெப்ரவரி 08 வரையிலும் குறித்த வேலைகள் ஆரம்பிக்கப்படாததனால் வழங்கும் நிறுவனத்திலேயே வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபை மூலம் 2014 நவம்பர் 12 திகதிய இலக்கம் 25/2014 கொண்ட அரச நிருவாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு மாற்றமாக மின்சார வேலை அலுவலர் பதவிக்காக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு 2015 திசெம்பர் 04 திகதி அந் நிரந்தர நியமனம் இரத்துச்செய்யப்பட்டு மீண்டுடம் நாளாந்த கொடுப்பனவு செலுத்தும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தியதன் காரணமாக குறித்த அலுவலரால் 2016 செப்தெம்பர் 25 திகதி சபைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்ட்ட வழக்கிற்காக சபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 300,000 ஆன வழக்குக் கட்டணம் , உறிய ஆலோசனை

பெறப்படாமல் மற்றும் சுற்றறிக்கைக்கு மாற்றமாக செயற்பட்டதனால் சபைக்கு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்ட பயனற்ற செலவாக நிலவியது.

**3.6 ஒப்பந்தக்கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொரகும்புர இடுகாடு பாதையின் பாலத்தை நிர்மானித்தல்

கிராமத்திற்கு கிராமம், வாயிலிற்கு வாயில் கிராமிய பாலத்தை நிர்மானிக்கும் 2014 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட வேலை 2017 பெப்ரவரி 09 திகதி வரையும் பூர்த்தி செய்யாமல் நிர்மானப் பணிகள் நிருத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரினால் வேலை முடிவடைந்த திகதியை குறிப்பிடாத திகதியற்றரூபா 150,507 ஆன இறுதி பட்டியல் சமர்ப்பித்திருந்ததுடன், கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு கிட்டிய காலம் கழிந்திருந்த போதும் குறித்த நோக்கம் அடையப்பெறாததனால் வழங்கப்பட்ட ரூபா 98,000 ஆன முற்பணம் விளைவற்ற செசலவாக நிலவியது.

(ஆ) டன்கன் சிறுவர் பாடசாலை மற்றும் சிறுவர் பூங்கா அபிவிருத்தி மற்றும் நிர்மானம்

டன்கன் சிறுவர் பாடசாலை மற்றும் சிறுவர் பூங்கா அபிவிருத்தி மற்றும் நிர்மானத்திற்காக 2012 முதல் 2016 ஆண்டு வரை ரூபா 2,184,523 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அக் கட்டிடம் மற்றும்சிறுவர் பூங்கா பயன்படுத்துவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று சபைக்கு இல்லாதிருந்ததுடன் 2017 பெப்ரவரி 15 வரையும் சிறுவர் பாடசாலைக் கட்டிடம் மற்றும் பூங்கா அமைந்துள்ள வளவின் சரியான உரிமையும் சபைக்கு இருக்கவில்லை.

(இ) வாலவெல பிணி ஆய் நிலையம் மற்றும் சிறுவர் பாடசாலைக்கு மலசலகூட தொகுதியொன்று நிர்மானித்தல்

உள்ளூராட்சி நிறுவங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட கருத்திட்டத்தை மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 668,360 ஆன தொகைக்கு உடன்பட்டிருந்தது. பணம் மீள் நிரப்புவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் ரூபா 628,810 ஆன பட்டியல்கள் மற்றும் அளவுபத்திரங்கள் சமர்ப்பித்திருந்ததுடன், அப் பட்டியல்களில் மேற்கொள்ளப்படாத பெறுமதிரூபா 27,062 ஆன 5 வேலை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டதென பிழையாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) க்ரீன் பார்க் நீர் உத்தேச சிட்டத்திற்கு நீர் மூலமொன்று நிர்மானித்தல்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் உள்ளூராட்சி நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தினால் அமுல்படுத்தப்பட்டிருந்த குறிப்பிட்ட கருத்திட்டத்தின் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கிணறு நிர்மானிக்கப்படும் வளவு தொடர்பாக சரியான சாத்தியபாட்டு ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லாத காரணத்தால் உத்தேசிக்கப்பட்டநிர்மானவளவு தொடர்பாக ஏற்பட்டிருந்த பிபரச்சினைக்குறிய தன்மை மீது ரூபா 112,071 ஆன வெலை பூர்த்தி செய்யப்பட்டு நிர்மானப் பணி இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அந் ஒப்பந்தக்காரரிக்கு செலுத்தப்பட்ட ரூபா 347,000 ஆன முற்பணம் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூறப்பட்ட கருத்திட்டம் அனுகூலமில்லாததனால் ரூபா 1,677,354 ஆன புது மதிப்பீடொன்றால் நேர்சிரமம் அடிப்படையில் ஆழமான குழாய் கிணறொன்று நிர்மான்க்கப்பட்டு நீர் கருத்திட்டத்தை

அமுல்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த பொதிலும், இந்த புது மதிப்பீட்டுக்காக அனுமதி பெற்றிருக்கவில்லாததுடன், சபைக்கு சரியான உரிமை இல்லாத வெளித்தரப்பினருக்கு உரிய வளவில் கிணறு மற்றும் பம்பி அறை நிர்மானம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(iii) இரண்டாவது கருத்திட்டத்திற்காக 2016 திசெம்பர் 30 திகதி ரூபா 231,150 பெறுமதியான நீர் பம்பியை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி,ரூபா 356,266 பெறுமதியான நீர்க்குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு தொழில்நுட்ப அலுவலரிடம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையும் நீர் திட்டங்கள் அமுல்படுத்தியிருக்கவில்லை.

## 3.7 கருத்திட்டங்கள் தாமதித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** பிரதேச சபை நிதியத்தின் ஒதுக்கீடான ரூபா 2,800,000 ஆன 11 கருத்திட்டங்கள் 2017 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையும், ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லாததுடன், பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் -2016 இன் கீழ் ஒதுக்கீட்டுத் தொகை ரூபா 1,200,000 ஆன 8 கருத்திட்டங்கள் அமுல்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ)** பிரஜைகள் நீர் விநியோகம் மற்றும் சுகாதார கருத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு மற்றும் கருத்திட்டங்களின் செயற்பாடுகள் 2016 ஜுலை 30 தினத்திற்கு முன் பூர்த்தி செய்ய வேண்டியருந்த ஒதுக்கீடுத் தொகை ரூபா 450,000 ஆன 3 கருத்திட்டங்களின் வேலைகள் 2017 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையும் முடிவடைந்திருக்கவில்லை.

**(இ)** பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பதிங்கஸ்கொடுவ நீர் உத்தேசத்திட்டம் நீர் மூலங்களைமேம்படுத்தும் கருத்திட்டத்தின் 29 வேலை விடயங்களுக்காகரூபா 542,192 பெறுமதியான பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் 2016 திசெம்பர் 09 ஆம் திகதியில் கொள்வனவு செய்யப்பட்டு சபை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. நீர் கருத்திட்டத்தின் நிர்மானப் பணி 2016 நவம்பர் 30 பூர்த்தி செய்ய வேணடியதுடன் 2017 பெப்ரவரி 07 திகதி வரையும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.8 கழிவு பொருள் முகாமைத்துவம்

2012 ஆண்டு வரை மாகாண குறித்த அபிவிருத்தி உதவி மற்றும் சபை நிதியத்தினால் ரூபா 659,062 ஆன தொகை செலுத்தி நிர்மானிக்கப்பட்டிருந்த கட்டிடம் மற்றும் மாகாண குறித்த அபிவிருத்தி உதவியின் கீழ் கிடைத்திருந்த ரூபா 700,000 ஆன ஒதுக்கீட்டு பணத்தின் நிர்மானிக்கப்பட்டிருந்த டன்கன்வத்த இயற்கை பசளை கொட்டியல் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் மேற்கொள்ளப்படும் வகையில் பயனுள்ள செயலொன்றுக்காக ஈடுபடுத்துவதற்கு சபைக்கு வேலைத் திட்டமொன்று இருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதியின் 5(7) விதி பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடாத்திச்செல்லப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமை குழு

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

------------------------------

**(அ)**41 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,872,000 ஆன ஒதுக்கீடுகளின் எவ்வித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லாததுடன்11 செலவின விடயங்களுக்காகஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 755,000 ஆன முதல் ஒதுக்கீட்டின் ரூபா 546,200 தொகை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்ட பின்னரும் தேறிய ஒதுக்கீடுமேசேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ)** 30 செலவின விடயங்களுக்கான தேறிய ஒதுக்கீடு மற்றும் செலவுகள் இடையில், 40சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சளவான விலகல்கள் நிலவியது.

**(இ)** 9 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 16,203,800 ஆன தொகை எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லாததுடன் 11 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் குறைவு இடையில்,விலகல் 37 சதவீதம் முதல் 98 இடையில் வீச்சளவாக நிலவியது. இன்னும் 18 வருமான விடயங்களில்மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமான அதிகரித்தலுக்கு இடையில், விலகல் 33சதவீதம் முதல் 450 சதவீதம் இடையில் வீச்சளவாக நிலவியது.

**(இ)** மீளாய்வாண்டினுல் பாதீடு திருத்ததிற்கு உள்ளாக்கியதன் பின்னரும்,பாதிடபட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளை இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

----------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்.
(ஆ) பதவியணியினர்முகாமைத்துவம்.
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்.
(ஈ) பாதீடு கட்டுப்பாடு.
(உ) களஞ்சிய கட்டுப்பாடு